**இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் – கூறு – I - 2017**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

இராண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திச் செயற்திட்டம் – கூறு – I இன் 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கை மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதிய 5228–எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் தேசிய மட்டத்தில் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் மாகாண மட்டத்தின் நடவடிக்கைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், 2013–2017 ஆண்டிற்கான தேசிய சுகாதார அபிவிருத்தித் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான நிதி உதவியை வழங்குவதற்காக செயற்திட்டம் அமுல்படுத்தப்படுகின்றது. ஊட்டச்சத்தின்மை மற்றும் தொற்றாத நோய்கள் என்பவற்றின் சவால்களிற்கு சிறந்த பதிலளிப்பதற்கான இயலுமைக்காக பொதுச் சுகாதாரத்தின் செயலாற்றல் நியமங்களை தரமுயர்த்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 25,270 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 129.8 மில்லியன் (200 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஆனதுடன் அதில் ரூபா 24,006 மில்லியனிற்குச் சமமான எஸ்டிஆர் 123.31 மில்லியன் (190 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) செயற்திட்டத்தின் கூறு – I இன் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட நடவடிக்கைகள் 2013 யூலை 01 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2018 செப்டம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய மட்டத்தில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வேறாகச் சமர்ப்பிக்கப்பட்ட செயற்திட்டத்தின் கூறு – I இற்கான நிதிக்கூற்று என்பவற்றின் மீதான கருத்துரைகளை உள்ளடக்கியிருந்தது.

**1.3 நிதி அறிக்கைக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

----------------------------------------------------------------------------------------

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்குகளின் தொகுப்பிலிருந்த இந்த நிதி அறிக்கையை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதி அறிக்கையைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதி அறிக்கை மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதி அறிக்கை பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதி அறிக்கையில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதி அறிக்கையின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதி அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதி அறிக்கையின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத் தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதி அறிக்கையில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்து சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் ஏற்படுத்தப்பட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் கடனிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன சுகாதாரத்துறையின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதி அறிக்கையானது நிதிப்பிரமாணம் 150 மற்றும் அரச கணக்குகள் திணைக்களத்தின் 2017 ஒக்தோபர் 16 ஆந் திகதிய 258/2017 ஆம் இலக்க அரச கணக்குச் சுற்றறிக்கை என்பவற்றிற்கிணங்க தயாரிக்கப்பட்டிருந்ததா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்கான சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் ஒதுக்கீட்டு கணக்குகளை அடிப்படையாகக் கொண்ட நிதி அறிக்கையானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 2017 ஒக்டோபர் 16 ஆந் திகதிய 258/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. திறைசேரிக் கணனி அச்சீட்டுத் தாள்கள், வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் பேணப்பட்ட புத்தகங்கள், ஏடுகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றுடன் மேற்குறிப்பிட்ட ஒதுக்கீட்டு கணக்குகள் உடன்பட்டிருந்தன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

வரிசை அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள செயற்திட்டப் பணிப்பாளர் மற்றும் கணக்காளர் உள்ளடங்கிய செயற்திட்டத்தின் முக்கிய பதவியணி நிலைகளில் உள்ளோர் பதில் கடமை அடிப்படையில் செயற்திட்டத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தனர். முழுநேர அடிப்படையில் அத்தகைய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2014 மே 21 ஆந் திகதிய டிஎம்எஸ்/சீ/1/16/செயற்திட்டம் எனும் இலக்கமுடைய கடிதத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகளுக்கு இது முரணாகும்.இந்த விடயம் முன்னைய ஆண்டிற்கான எனது அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதும், அதனைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

செயற்திட்டத்தால் பேணப்பட்ட பதிவேடுகளின் பிரகாரம், நிதிகளின் நிதியளிப்பு, பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் மீளாய்வாண்டிற்கான மற்றும் 2017 டிசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| சஅச | | | | | | | |
| கூறு – 1 | 190 | 24,006 | 3,106 | 07.56 | 1,160.03 | 23.61 | 3,619.40 |
| | **190** | **24,006** | **3,106** | **07.56** | **1,60.03** | **23.61** | **3,619.40** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், நிதியளிப்பு முகவரால் மீளாய்வாண்டிற்காக ரூபா 6,707.55 மில்லியனிற்குச் சமமான 43.75 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணவழிப்பாக வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் வரிசை அமைச்சிற்காக ரூபா 3,636 மில்லியன் மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்களுக்காக ரூபா 3,260 மில்லியன் என்பன மாத்திரமே ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தன. மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில், 68.95 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 4,751.46 மில்லியன் மாத்திரமே மீளாய்வாண்டின்போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 24,006 மில்லியனுக்கு சமமான 190 மில்லியன் அமெரிக்க டொலரிலான மொத்த ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டின் 15.08 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 3,619.40 மில்லியனுக்குச் சமமான 23.61 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாத்திரமே 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு வரிசை அமைச்சால் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஆகையால், செயற்திட்டத்தின் எஞ்சிய ஓராண்டில் முழு ஒதுக்கீட்டையும் பயன்படுத்தக்கூடிய சாத்தியம் சந்தேகத்திற்குரியதாகும்.

### 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தின் கீழ் அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக இலக்குகள் 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகள் மற்றும் 11 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளினதும் 07 பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டிகளினதும் விரும்பிய பெறுபேறுகள் அடையப்பட்டுள்ளன. பணவளிப்பு இணைப்பு குறிகாட்டிகளின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ளுதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) பணவளிப்பு இணைப்பு குறிகாட்டி - 01 இன் கீழ் இலங்கையிலுள்ள வைத்தியசாலையின் அவசர சிகிச்சை சேவைகளின் முன்னேற்றத்திற்கான செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், நாட்டிலுள்ள 14 வைத்தியசாலைகளில் புதிய அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை நிர்மாணிப்பதற்கும் ஏனைய 14 வைத்தியசாலைகளில் ஏற்கனவேயுள்ள அவசர சிகிச்சை பராமரிப்புப் பிரிவுகளை தரமுயர்த்துவதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தன. கணக்காய்வுப் புலனாய்வுகளின் பிரகாரம், ஏற்கனவேயுள்ள அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை தரமுயர்த்துதல் மீதான 12 ஒப்பந்தங்கள் மாத்திரமே 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. அவ்வாறான 14 கூறுகளில் ரூபா 1,192 மில்லியன் கிரயத்திலான 04 புதிய அவசர சிகிச்சை பராமரிப்பு பிரிவுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் 2015 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டபோதும், செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்த திகதியிலிருந்து 03 ஆண்டுகள் கடந்தும் வேலைகள் எதுவுமே பூர்த்தியாகியிருந்தன. 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பொலநறுவை பொது வைத்திய மனை நிர்மாண வேலைகள் பூர்த்தியாகாதபோதும் செயற்திட்டத்தின் பணவளிப்பு இணைப்பு குறிகாட்டியின் சாதனைகள் மீதான அறிக்கையில் அது பூர்த்தி செய்யப்பட்ட வேலையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம்,இணைப்பு குறிகாட்டி – 09 இன் கீழ் நாடளாவிய ரீதியில் காசநோய் அறிகுறிகளை கண்டறிவதற்காக 13,861 நபர்கள் பரிசோதிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இதன்மூலம் காசநோய் அறிகுறிகளைக் கண்டுபிடிப்பதில் அதிகரிப்பு ஏற்படுத்தி, பொதுமக்களுக்கு கல்வி புகட்டி அவர்களுக்கிடையே மாற்றத்தை ஏற்படுத்தி நவீன தொழில்நுட்ப ரீதியான கண்டுபிடிப்பைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மீளாய்வாண்டு முழுவதும் 10,811 நபர்கள் மாத்திரமே கண்டறியப்பட்டிருந்தனர். கணக்காய்வு நோக்கத்திற்கமைய, புதிய காசநோயாளிகளினை இனங்காணுதலானது நோய்களை இனங்காணுதல் மற்றும் அவற்றின் மீதான தொடர்ச்சியான சிகிச்சைகள் தொடர்பாக நோயாளிகளை அறிவூட்டுவதில் பிரதானமாக தங்கியுள்ளது. அது போதியளவு அமுலாகவில்லை.

(இ) பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி 10 இன் கீழ், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தையும் பட்டோலையையும் பெறுவதுடன் கழிவுப்பொருள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தையும் பெறுவதற்காக ‘A’ தரத்திலான அடிப்படை மருத்துவ மனைகளது செயலாற்றலை அறவிடுவதற்குச் செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 69 ‘A’ தரத்திலான அடிப்படை மருத்துவ மனைகளில் 12 மருத்துவ மனைகள் மாத்திரமே அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கான தகுதியைப் பெற்றிருந்தன. இது மீளாய்வாண்டின்போது பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி 10 இன் கீழ் எய்த வேண்டிய 30 சதவீத இலக்கில் 17.4 சதவீத இலக்கு மாத்திரமே ஆகும்.

(ஈ) பணவளிப்பற்ற இணைப்பு குறிகாட்டி 11 இன் பிரகாரம், மீளாய்வாண்டின்போது 665 பண்டங்களும் சேவைகளும் வரிசை அமைச்சின் பொருட் கொள்வனவுப் பிரிவால் பெறுவதற்குத் திட்டமிடப்பட்டுமிருந்தது. இதன் பொருட்டு மீளாய்வாண்டின் முதல் 09 மாதங்களில் அவ்வாறானவற்றின் 80 சதவீதத்தைக் கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், ஆண்டின் முதல் 09 மாதங்களின்போது அவற்றுள் 470 ஐ பெறுவதற்கான ஒப்பந்தங்களே வழங்கப்பட்டிருந்தன.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 6,853.46 மில்லியனுக்கு சமமான 53.38 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிரயத்தில் 14 நேரியல் வேகமூட்டிகள், 08 சீரி சிமுலேட்டர்கள் மற்றும் 08 பிறேசிதெறபி இயந்திரங்கள் ஆகிய புற்றுநோய்க்கான சிகிச்சையளிப்பு உபகரணங்களை விநியோகித்து செயற்படுத்துவதற்காக 02 வெளிநாட்டு விநியோகஸ்தர்களால் 2010 செப்டம்பரில் மேற்கொள்ளப்பட்ட வேண்டப்படாத பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளமுடியாத நிதி நிபந்தனைகள் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தன. எனினும், 2015 இல் அதே ஒப்பந்தமானது சர்வதேச ரீதியில் புதிய விலைமனுக்களை கோராமல் அதே விலையில் அதே விநியோகஸ்தருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 476 மில்லியன் பெறுமதியான 02 நேரியல் வேகமூட்டிகள் 2015 டிசெம்பர் 02 இல் வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 மே 31 வரையிலும் உரிய இயந்திரங்களை நிறுவுவதற்கான கொங்கிறீற் நிலவறைகள் அமைக்கப்பட்டிருக்காமையால் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பிலுள்ள போதனா வைத்தியசாலைகளில் விளைவற்றிருந்தன.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்ட விபத்துகள் மற்றும் அவசர பராமரிப்பு சேவைகளுக்கான தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்கு களுத்துறை, பொலநறுவை, யாழ்ப்பாண பொது மருத்துவ மனைகளிலும் கல்முனை அடிப்படை மருத்துவ மனையிலும் அவசர பராமரிப்புக் கூறுகளுக்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குச் செயற்திட்டத்தால் ரூபா 484.2 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. களுத்துறை பொது மருத்துவ மனைக் கட்டிட நிர்மாண வேலைக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அவசர அடிப்படையில் வேலைகளை மேற்கொள்வதற்கென ரூபா 922 மில்லியன் டேர்ன் கீ அடிப்படையிலான ஒப்பந்தம் ஒரு அரச கூட்டுத்தாபனத்திற்கு 2 கட்டங்களில் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் வேலை நிறைவடைய வேண்டிய திகதியிலிருந்து 10 மாதம் முடிவுற்ற நிலையில் நிர்மாண வேலையினது 01 ஆம் கட்டம் நிறைவேறாதிருந்தது. ஒப்பந்தகாரருடன் எழுத்துமூல உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டிருக்கவுமில்லை.

(ii) அதே அரச கூட்டுத்தாபனத்திடமிருந்து மதியுரைச் சேவையும் பெறப்பட்டிருந்தது. இதற்கான எழுத்துமூல உடன்படிக்கை இல்லாததுடன், இது அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவைக்கு முரணானதும் ஆகும். மேலும், நிர்மாண வேலையை ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்ட முற்பணத்திலிருந்து மதியுரைச் சேவைக்கு வழங்கப்பட்ட ரூபா 11.14 மில்லியன் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

(iii) கட்டிடத்தின் 01 ஆம் கட்ட நிர்மாண வேலைகளுக்கு மதிப்பிடப்பட்ட கிரயமான ரூபா 328.75 மில்லியன் ரூபா 38.71 மில்லியனால் அதிகரிக்கப்பட்டபோதும், அதற்கு தேவையான அங்கீகாரத்தைப் பெற்றதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான 01 ஆம் கட்ட நிர்மாண வேலைகளுக்கான வேறுபாடுகளுக்கு ரூபா 19.47 மில்லியன் கோரப்பட்டு வரிசை அமைச்சினது செயலாளரின் அங்கீகாரமின்றி அது தீர்த்து வைக்கப்பட்டுமிருந்தது. 2018 மே 15 வரை நிர்மாண வேலைக்கு நீடிப்பு வழங்கியமைக்கான வரிசை அமைச்சினது செயலாளரின் அங்கீகாரமும் அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.14.1 ஆம் பந்தியின் பிரகாரம் பெறப்படவில்லை.

(iv) ஒப்பந்தத்தின் 01 ஆம் கட்ட வேலைகளுக்கு வழங்கப்பட்ட சான்றுறுதியுடன் தொடர்புடைய கொடுப்பனவாகிய ரூபா 2.09 மில்லியனானது ஒப்பந்தத்தின் 02 ஆம் கட்டத்தின் கீழ் சான்றுறுதிப்படுத்தப்பட்ட வேலையாகக் கணக்கிலிடப்பட்டுமிருந்தது.

### 3.4 நிதிக் கட்டுப்பாடு மீதான விடங்கள்

2010 யூன் 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 133(2) என்பவற்றிற்கமைய, வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான கணக்காய்வுத் திட்டத்தைத் தயாரித்து அதனை அமுல்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், அவ்வாறானதொரு உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் பிறிதாகத் தயாரிக்கப்பட்டு மீளாய்வாண்டின்போது அமுல்படுத்தப்பட்டதற்கான சான்றெதுவும் கணக்காய்விற்குக் கிடைக்கப் பெறவில்லை. 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதியன்று முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் செயற்திட்டத்திற்கென உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தபோதும், 2017 டிசெம்பர் 01 ஆந் திகதி அவர் சேவையிலிருந்து விலகும் வரை உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பான சான்றெதுவும் கிடைக்கப்பெறவில்லை.

### 3.5 சர்ச்சைக்குரிய விடயங்கள்

வரிசை அமைச்சினது வாகனக் குழாமிலுள்ள வாகனங்களைப் பராமரிப்பதெற்கென ரூபா 4.70 மில்லியன் கிரயத்தில் கணனி மென் அணி முறைமை ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் துறைக் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகளைச் செயற்திட்டம் மேற்கொண்டிருந்தது. கணக்காய்வின்போது பின்வரும் விடங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிப்பிரமாணம் 135 மற்றும் சுகாதார, போசணை, சுதேச வைத்திய அமைச்சினது 2016 சனவரி 06 ஆந் திகதிய சுகாதாரம்/சீஏ/01/2016 ஆம் இலக்கச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக குறித்த உடன்படிக்கை வரிசை அமைச்சினது போக்குவரத்துப் பிரிவுப் பணிப்பாளரால் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

(ஆ) 2014 டிசெம்பர் 18 ஆந் திகதி ஆரம்பமாகி 2016 யூன் 30 ஆந் திகதி முடிவடையுமாறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உடன்படிக்கை 2016 பெப்ரவரி 29 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2017 டிசெம்பர் 31 வரை மென் அணியை நிறுவும் நடவடிக்கைகள் பூர்த்தியாகாதபோதும், 2017 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் கால நீடிப்பு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(இ) செயலாற்றல் பிணை முறியைப் பெறாது வழங்குனருக்கு ரூபா 1.88 மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்தது.